# அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்

திருவான்மியூர், சென்னை-600 041. ✆ : 24410477, 24422688

(தமிழக அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்திற்குட்பட்டது)

**அனுப்புநர்**

**தெ.ப. ஏகாம்பரம் எம்.ஏ.,**
செயல் அலுவலர்

**பெறுநர்**

**சிறப்புஆணையர் (ம) ஆணையர் அவர்கள்,**
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
நுங்கம்பாக்கம், சென்னை–34.

**கடித எண். 27/1416 நாள் : 09–06–2008**

அய்யா,

பொருள் : திருக்கோயில்களின் பாதுகாப்பு – திருக்கோயிலில் கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துதல் – இன்னொவேட்டிவ் டிசைன்ஸ் **(Innovative Designs )** நிறுவனத்தார் சோதனை முறையில் கள்வர் எச்சரிக்கை மணி பொருத்தி – சோதனை செய்தது – அறிக்கை சமர்ப்பித்தல் – அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் – திருவான்மியூர் – சென்னை–41 – தொடர்பாக.

பார்வை : ஆணையரின் ந.க.எண். 6173/2008 ஜி 2(1) நாள் 10.04.2008.

*****

பார்வையில் காணும் ஆணையரின் உத்தரவின்படி, திருக்கோயில்களின் பாதுகாப்பிற்காக கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துவது தொடர்பாக, சென்னை–26, வடபழனி, இன்னொவேட்டிவ் டிசைன்ஸ் **(Innovative Designs )** என்னும் நிறுவனத்தார் சோதனை முறையில், இத்திருக்கோயிலில் எச்சரிக்கை மணி பொருத்திப் பார்த்திட அனுமதிக்கப்பெற்றது.

மேற்படி நிறுவனத்தார் ஜுன் 2008ஆம் மாதத்தில், இத்திருக்கோயிலில் கள்வர் எச்சரிக்கை மணியைப் பொருத்தினர். திருக்கோயிலின் தங்கரத மண்டப வாயில், சுவாமி சன்னதி முதன்மை வாயில் முதலான இடங்களில் நுண்ணுணர்வு முனைகள் **(Sensor Points)** நிர்ணயித்து திருக்கோயிலின் அலுவலகத்தில் எச்சரிக்கை மணிக்கான கருவிகளை நிறுவினர்.

மேற்குறித்த திருக்கோயில் சன்னதி மற்றும் நுழைவு வாயில்கள் பூட்டப்பட்ட நிலையில் வெளியார் யாரேனும் கதவுகளைத் திறக்க முயன்றால் உடனே எச்சரிக்கை மணி இயங்கும். அவ்வொலி சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் வரை தெளிவாகக் கேட்குமென அந்நிறுவனத்தார் தெரிவித்தனர். மேலும், அதே சமயம் பதிவு செய்யப்பட்ட திருக்கோயில் நிர்வாகிகள், காவல் நிலைய ஆய்வாளர் ஆக ஐந்து நபர்களுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பவும், மேலும், இதுகுறித்து அபாய ஒலி எழுப்பி திருக்கோயிலில் அசம்பாவிதம் நடைபெறுகிறது எனத் தெரிவிக்கவும் வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 03–06–2008 அன்று இத்திருக்கோயிலில் நிர்வாகத்தினர் மற்றும் சிலை திருட்டு தடுப்புப் பிரிவு காவல்துறை துணைத் தலைவர் முன்னிலையில், சோதனை முறையில் மேற்படி பாதுகாப்பு எச்சரிக்கை மணியை மேற்படி நிறுவனத்தார் இயக்கிக் காட்டினர்.

மேற்படி இன்னொவேட்டிவ் டிசைன்ஸ் நிறுவனத்தார் நிறுவிய கள்வர் எச்சரிக்கை மணி, திருப்திகரமான முறையில் இயங்கியது எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

09/06/08

**செயல் அலுவலர்**

**நகல் சமர்ப்பிக்கப்பெறுகிறது**

**1. இணை ஆணையர் அவர்கள்,**
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
நுங்கம்பாக்கம், சென்னை–34.

**2. திரு. கே. வி.சுரேஷ்,**
நிறுவனர்,
இன்னொவேட்டிவ் டிசைன்ஸ்,